

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஊடகவியலாளர் மகிழ்நன் அவர்களின் தாயார் திருமதி மல்லிகா பாலசுப்ரமணியன் அம்மையார் அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி, சென்னை கோடம்பாக்கத்தில் உள்ள இல்லத்திற்கு நேற்று முன்தினம் (22.1.2026) நேரில் சென்று அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.



பெரம்பலூர் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அ.இளையராஜா தந்தையும் தெரணி கிளை கழக செயலாளருமான இரா. அமுல்ராஜ் அவர்களின் படத்திறப்பு விழா அவரது இல்லத்தில் நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கலந்து கொண்டு அமுல்ராஜ் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார். இதில் ,பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன்,ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் என். கிருஷ்ணமூர்த்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் திருச்சி நாடாளுமன்ற தொகுதி செயலாளர் ஜெ.தங்கதுரை மற்றும் மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றுகிறார்!

# கரூரில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது!

கரூர்.ஜன.24.

கரூரில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது. கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி சிறப்புரையாற்றுகிறார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் நாளை (25ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை) மாலை 6:00 மணி அளவில் கரூர் 80 அடி சாலையில் நடைபெறுகிறது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தலைமை வகித்து பேசுகிறார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.ஜி.சரவணமூர்த்தி வரவேற்புரை ஆற்றுகிறார்.

கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் எம்.பி.யுமான ஆர்.எஸ். பாரதி, தலைமைக் கழக பேச்சாளர்கள் டான் அசோக், தி.பிரபு, எம்எல்ஏக்கள் இரா. மாணிக்கம், பிஆர்.இளங்கோ, க. சிவகாமசுந்தரி, தொகுதி பார்வையாளர்கள் பொள்ளாச்சி சித்திக், பனப்பட்டி தினகரன், அம்பாள் நந்தகுமார், பி.கேசவன்,

கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், சட்டத் துறை இணைச் செயலாளர் என். மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கை பரப்பு துணைச்செயலாளர் கரூர் முரளி, மாநில சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் முனைவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவி ராஜா, தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயகுமார், மாநகர செயலாளர் எஸ்பி.கனகராஜ், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் டி. ராஜேந்திரன், எம்எஸ்கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரிசுப்பிரமணி, பிவி. பாரத்,

செயற்குழு உறுப்பினர்கள் சுப. ராஜகோபால், காலனி செந்தில், ஆண்டாள்பாலகுருபரன், எம். துரைராஜ், சாலை சுப்பிரமணி, என். செல்வராஜ், பகுதி கழகச் செயலாளர்கள் க.சுப்பிரமணியன், கோல்ட்ஸ்பாட் ஆர் எஸ்.ராஜா, ஆர். ஜோதிபாசு, விஜி எஸ் குமார், எம். பாண்டியன், ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் இ.ராமர், எம்எஸ். மணியன், கே.கருணாநிதி, எம். ரகுநாதன், ஜி.அண்ணாதுரை, அ.சந்திரன், கே.ரவிராஜா, கே. பாஸ்கரன், எம். ராமலிங்கம், எஸ். சுதாகர், என். மணிகண்டன், த. கார்த்திக், சி. வளர்மதி, பி. முத்துக்குமாரசாமி, விகே. வேலுச்சாமி, எல்.கரிகாலன், ப. தியாகராஜன், சி.கதிரவன், அ. குணசேகரன், வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ்.ஆறுமுகம், விகேடி .ராஜ் கண்ணு, கே.வேலுச்சாமி, கே. சாமிநாதன், சி.கருப்பையா, பிபி. சரவணன், சிவகாமி சண்முகம், எஸ். காளியப்பன், எம். சிவசாமி, ஏ.நஞ்சு ண்டேஸ்வரன், என். ராமலிங்கம், சிவகாமசுந்தரி, கலவதி சக்திவேல், பிஏ.குமார்,

பேரூர் செயலாளர்கள் கே. அம்மையப்பன், கே.முரளிராஜா, இ. ரவீந்திரன், ஆர்.மோகன்ராஜ், எம். சசிகுமார், எம்.முத்து, சி.தங்கராஜ், பிஎஸ்.மணி, அணிகளின் அமைப்பாளர்கள் வெங்கமேடு சக்திவேல், நந்தினி தேவி, தாசப்பிரகாஷ், சுப்பிரமணியன்,

தென்னிலை பாலு, பி.சங்கர், புலவர் அருணாபொன்னுசாமி, வி. அருண், பி. மோகனசுப்பு, பழ அப்பாசாமி, ஆர்.தியாகராஜன், எம். பிரின்சி, சி.நவாஸ்கான், மா. அம்பிகாபதி, தம்பிசுதாகர், எம். விக்ரம், கு.வடிவேல், எஸ். செல்வராஜ், சாவிநல்லுசாமி, எஸ். மனோகர், எம்ஆர்எஸ்.சுரேஷ், பங்க் சுப்பிரமணி, விஆர். அண்ணா வேலு,

மாணவரணி துணை அமைப்பாளர்கள் டிடிகே அருள் முருகன், எம்பி கார்த்திகேயன், ஜி. திவாகர், ந.அருள்முருகன், எஸ். ஸ்ரீநாத், எஸ். யசோதா, திருகை சரண், டிஎம்.செல்வேந்திரன், அங்கு லோகேஷ், என்.பிரபாகரன், ஜி. சதீஷ், எஸ்.சரண்யா, பகுதி ஒன்றிய அமைப்பாளர்கள் மனோஜ், கார்த்திக் ராஜா, கோபாலகிருஷ்ணன், கார்த்திகேயன், நந்தகுமார், வெங்கடேஷ், ரூபன், முகமது யூனுஸ், நிவாஸ் குமார், கலைச்செல்வன், துரைராஜ் கௌதமன், ஸ்ரீகாந்த், பிரவீன், கடலரசு, தினகரன், தமிழரசன், ராஜேஷ், பொன்னுசாமி, பாண்டியராஜன், இளையராஜா, மகாமுனி, ,விக்னேஷ், ரமேஷ், மணிகண்டன், லோகேஸ்வரன் தினேஷ்,சிலம்பரசன், தாமோதரன், சேகர், தரணிதரன், விஜயன், மணிகண்டன், தினேஷ், தினேஷ் குமார், சந்திரசேகர், முருகானந்தம், முன்னிலை வைக்கின்றனர்.

### இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்


# மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*இராமநாதபுரம், ஜன. 24 -*

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர், இளந்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ் மொழிக்காக அரும் பாடுபட்ட மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாளை (25.01.2026 - ஞாயிற்றுக்கிழமை) கீழ்க் கண்டவாறு நடைபெற



உள்ளது.

பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் பரமக்குடி சட்டமன்றத் தொகுதி.காந்திசிலை அருகில், பரமக்குடி நகராட்சி மாலை 5.00 மணி வனத்துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், தமிழ்பிரியா, ஒப்பிலாமணி, வா.சந்தான லெட்சுமி, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்ப்புற அமைப்புகளின் பிரதிநிதிகள், நிர்வாகிகள், அனைத்து அணி களின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், பாகமுகவர்கள்(BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடி கள், கழக தோழர்கள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் பொதுக் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தீ பரவட்டும்! கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்! அன்னைத் தமிழை உயிரினும் மேலாக காப்போம்!

வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் - சைதை சாதிக் - குடந்தை ராமகிருஷ்ணன் சிறப்புரை!

*கன்னியாகுமரி, ஜன. 24 -*

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நாளை (25.01.2026 - ஞாயிற்றுகிழமை) மாலை 5.00 மணிக்கு நாகர்கோவில், செம்மாங்குடி ரோட்டில் வைத்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அ.அருண்காந்த் தலைமையில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர்கள் சைதை சாதிக், குடந்தை ராமகிருஷ்ணன், இளம் பேச்சாளர் விஜயராஜ் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

ஆகவே, மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்



வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,

கழக அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக பங்கேற்று சிற ப்பிக்குமாறு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் செய்துள்ளனர்.

### காணொலி வாயிலாக

# திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலை! பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றம்!

திருச்சி, ஜன 24 –

திருச்சி தெற்கு மாவட்டத்தில் காணொலிக் காட்சி வாயிலாக மாவட்டச் செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் கோவிந்தராஜ் தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் நடைபெற்றது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தைத் தொடர்ந்து, திருச்சி தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் 21/01/2026 புதன்கிழமை காலை 11 மணிக்கு காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது .

தலைமைக் கழகத் தீர்மானத்தை ஒட்டி மாவட்ட கழகத்தின் சார்பாக கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**வெல்லும் தமிழ்ப் பெண்கள் என்ற தலைப்பில் வீடு வீடாக மகளிர் பரப்புரை!**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம், தோழி விடுதிகள், புதுமைப்பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்கள் என எண்ணற்ற மகளிர் மேம்பாட்டுத்திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டுப் பெண்களை உலகளவில் 'வெல்லும் தமிழ்ப்பெண்களாக' மாற்றியுள்ள மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தலில் வென்று திராவிட மாடல் 2.0 அமைந்திடும் வகையில், நமது திராவிட மாடல் அரசு பெண்களுக்குச் செய்துள்ள சாதனைத்திட்டங்களைப் பெண்களிடம் எடுத்துக் கூறி மகளிரின் முழுமையான ஆதரவு கழகத்திற்கு மட்டுமே என்ற நிலையை உறுதி செய்திட வேண்டும் என கூட்டம் தீர்மானிக்கிறது.

மகளிரணி சார்பில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் மகளிரணி மாநாடு வரும் 26.01.2026 அன்று டெல்டா மண்டல 'வெல்லும் தமிழ்ப் பெண்கள்' மாநாடு தஞ்சையில் நடைபெற உள்ளது.

இந்த மாநாடுகளை அடுத்து, பிப்ரவரி 1ஆம் தேதி தொடங்கி மார்ச் 8ஆம் தேதி வரைக்கும் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலம் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்குட்பட்ட வீடுகளில் வீடு வீடாகப் பரப்புரை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், அதுபோது கழக அரசின் மகளிர் நலத்திட்டங்களை எடுத்துக் கூறியும், சாதனைத் திட்டங்களின் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் மக்களிடம் கழகத்திற்கான ஆதரவைத் திரட்டிட வேண்டும் எனவும், இந்தப் பரப்புரை மூலம் பெண்கள் வாக்கு சிந்தா மல் சிதறாமல் முழுமையாக கழத்திற்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

**தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை!**

பிப்ரவரி1 முதல் பிப்ரவரி28 வரை தமிழ்நாடு முழுவதும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரையை மேற்கொள்ளும் வகையில் நட்சத்திரப் பரப்புரையாளர்களைத் தேர்ந்தெடுத்து தலைமைக்கழகம் அனுப்பி வைத்திட வேண்டும் என கேட்டுக் கொண்டதற்கு இணங்க சிறப்பாக பணியாற்றுவோம் நட்சத்திரப் பரப்புரையா ளர்கள் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் தலா 4 இடங்களில் தெருமுனை கூட்டங்கள் அல்லது அரங்கக் கூட்டங்களாக பரப்புரை செய்வதுடன், தங்கள் சுற்றுப்பயணத்தின் போது மண்டலப் பொறுப்பாளருடன் இணைந்து ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் முக்கியப் பிரமுகர்கள், இளைஞர்கள்/ மாணவர்கள், தொழில் முனைவோர் உள்ளிட்டோரை சந்தித்தும் கலந்துரையாடலாக பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. இப்பரப்புரைக்குத் தேவையான ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரையை வெற்றியடையச் செய்திடுவது என இந்த கூட்டம் தீர்மானிக்கிறது.

**'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி மாநாடு**

கழக இளைஞரணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 14.12.2025 அன்று திருவண்ணா மலையில் வெற்றிகரமாக நடைபெற்ற வடக்கு மண்டல இளைஞரணி சந்திப்பைத் தொடர்ந்து, பிப்ரவரி 7ல் விருது நகரில் தென் மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு நடைபெற உள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலைத் திறம்பட எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாட்டின் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' கூட்டங்களை நடத்தி வெற்றிக்கான வியூகத்தை வகுத்திடுமாறு கழகத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் கழக உடன்பிறப்புகளால் வெற்றிக்கான வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2),

100 வாக்காளர்களுக்கு ஒருவர் என நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BLC) மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) ஆகியோரைத் தேர்தல் பணிக்கு முழுமையாகத் தயார் செய்யும் வகையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" வாக்குச்சாவடிக் குழுவினருக்கான பயிற்சி



மாநாடுகளை நான்கு மண்டலங்களில் நடத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது. அதன்படி பிப்ரவரி11 அன்று சென்னை மற்றும் விழுப்புரம் மண்டலங்களுக்கான மாநாட்டை தாம்பரம் படப்பையிலும், பிப்ரவரி14 அன்று வடக்கு மண்டலம் மாநாட்டை திருப்பத்தூரிலும், பிப்ரவரி21 அன்று தெற்கு மண்டலம் மாநாட்டை மதுரையிலும், பிப்ரவரி27 அன்று மேற்கு மண்டலத்திற்கான மாநாட்டை கோவையிலும் நடத்திட இம்மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.

**'ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்'**

கழக மாநில மாநாடு

சட்டப்பேரவைத் தேர்தலில் கழத்தின் வெற்றியை பறை சாற்றும் வகையில் மார்ச்8 அன்று தீரர்கள் கோட்டமாம் திருச்சியில் 10 இலட்சம் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்ளும் 'ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட் டும்' மாபெரும் கழக மாநில மாநாட்டை நடத்துவதென இந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் தீர்மானிக்கிறது.


இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

இந்த கூட்டத்தில் மாநகரக கழகச் செயலாளர் மு.மதிவாணன், நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் சல்மா சட்ட மன்ற உறுப்பினர் இனிகோ இருதராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர,பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோ. மோகனதாசன்

### சனவரி 24 (2012)



கழகம் ஆரம்பித்த காலத்தில், சீர்காழி வட்ட துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து, தொடர்ந்து கொள்ளிடம் ஒன்றியக் கழகத்தின் முதல் செயலாளராகவும், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட துணைச் செயலாளராகவும், நாகை மாவட்டக் கழக அவைத்தலைவராகவும் – துணைச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

பூம்புகார் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கொண்டல் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – சீர்காழி ஒன்றிய பெருந்தலைவராகவும், கூட்டுறவு வங்கித் தலைவராகவும், சீர்காழி நிலவள வங்கித் தலைவராகவும், மாநில நிலவள வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

"பல தியாகங்களைச் செய்து, பலமுறை சிறை சென்று, எந்தச் சூழ்நிலையிலும் என்பால் கொண்ட அன்பை மறவாமல் என்னோடு பாசத்தோடு பழகி வருகின்ற தம்பி" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.